## நீங்கள் சேவைக்குச் சென்றுபார்க்கும் போது பார்க்க வேண்டியவை என்ன

- வரவேற்கப்படுவதாக உங்களை உணர வைத்தார்களா? உயர் தரமான கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் குடும்பங்களுக்கும் பயிற்றுநகளுக்கும் இடையிலுள்ள கூட்டுரிமையை அடிப்படையாகக் கொண்டவை. பயிற்றுநர்கள் உங்களுடைய பிள்ளை மற்றும் உங்களுடைய குடும்பத்தைப் பற்றிய கேள்விகளைக் கேட்டனரா? பயிற்றுநர்கள் உங்களுடைய கேள்விகளிலும் கருத்துகளிலும் அக்கறை காட்டினரா?
- உங்களுடைய பிள்ளை உங்களுடன் இருந்தால், பயிற்றுநர்கள் (உங்களின் ஊடாக உங்களுடைய பிள்ளையுடன் கதைக்காமல்) நேரடியாக உங்களுடைய பிள்ளையிடம் கவனம் செலுத்தினரா?
- சேவையைப் பயன்படுத்தும் சிறுவர்களின் கலாச்சாரங்களைக் கொண்டாடுகின்ற பல்வகையான வேடிக்கை மற்றும் சவால்விடும் கற்றல் வாய்ப்புகள் உள்ளனவா?
- உட்புற மற்றும் வெளிப்புறப் பகுதிகள் சிறுவர்களுக்கு தூண்டுதலளிக்கும் கற்றல் அனுபவங்களை அளிக்கின்றனவா - உதாரணமாக, புதிய விடயங்களை ஆராய்ந்து, கண்டுபிடிக்கும் வாய்ப்பு? சிறுவர்கள் மற்றவர்களுடன் அல்லது தனியாக விளையாடுவதற்கு அங்கு இடம் இருக்கிறதா? சிறுவர்கள் அமைதியாக இருக்கக் கூடியதாக அங்கு இடங்கள் உள்ளனவா?

## உங்களுடைய கேள்விகளைத் தயாராக வைத்திருங்கள்

- பயிற்றுநர்கள் உங்களுடைய பிள்ளையின் கற்றலுக்கு ஆதரவளிக்க உங்களுடன் எப்படிப் பணியாற்றுவர்?
- பயிற்றுநர்கள் உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்களை எப்படிச் சேர்த்துக்கொள்வர்?
- பயிற்றுநர்கள் உங்களுடைய பிள்ளையின் முன்னேற்றத்தைக் கலந்துரையாடுவதற்கு அங்குள்ள வாய்ப்புகள் எவை?
- உங்களுடைய பிள்ளைக்கு மேலதிகத் தேவைகள் இருந்தால், சேவையானது உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைக்கும் எப்படி உதவிசெய்யும்?
- சாதகமான நடத்தையை நிகழ்ச்சித் திட்டம் எப்படி ஊக்குவிக்கிறது?
- உங்களுடைய பிள்ளைக்கு சுகவீனம் அல்லது மனக்குழப்பம் வந்தால் என்ன நடக்கும்?
- சேவையானது கனிஷ்ட பாலர்வகுப்புச் சான்றிதழை காட்சிக்கு வைத்திருக்கிறதா? இந்தச் சான்றிதழ் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் விக்ரோரிய அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெறுகிறது என்பதையும் அது தகுதியுள்ள ஆரம்பகாலக் குழந்தைப்பருவ ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது என்றும் காட்டுகிறது.
- தேசிய தர நியமத்திற்கு எதிராக சேவையின் தரவரிசை என்ன (அவுஸ்திரேலியா முழுவதுமான கல்வி மற்றும் கவனிப்புச் சேவைகளின் தர அமைப்பின் பகுதி)? எழுத்துமூல மதிப்பீட்டை நீங்கள் பார்க்க முடிகிறதா?
- இடங்களுக்காக காத்திருப்போர் பட்டியல் உள்ளதா?
  பதிவுசெய்வதற்கு அல்லது காத்திருப்போர் பட்டியலில் இடுவதற்கு நீங்கள் ஏதேனும் பணவைப்பைச் செலுத்த வேண்டியுள்ளதா? உங்களால் பணவைப்பைச் செலுத்த முடியாது என்றால் சேவையிடம் கூறுங்கள்.

## என்னுடைய பிள்ளை கனிஷ்ட பாலர்வகுப்பைத் தொடங்கும் போது அவருக்கு என்ன வயதாக இருக்க வேண்டும்?

பிள்ளைகள் பாலர் பாடசாலையைத் தொடங்கும் முன்னருள்ள வருடத்தில் கனிஷ்ட பாலர்வகுப்பிற்குச் செல்வது அவர்களுக்கு வழக்கமாகும். இது அடிக்கடி “நான்கு வயது கனிஷ்ட பாலர்வகுப்பு” என்று அழைக்கப்படும்.

உங்களுடைய பிள்ளை பாடசாலையைத் தொடங்கும் வருடத்தின் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அவருக்கு ஐந்து வயதாகினால், அவர் பாடசாலைக்குச் செல்லத் தொடங்கலாம். உங்களுடைய பிள்ளைக்கு விதிவிலக்கு இருந்தால் தவிர, அவர் ஆறு வயதை அடையும் முன்னர் பாடசாலையில் சேர்க்கப்பட வேண்டும். ஆகவே, நாட்காட்டி வருடத்தில் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் உங்களுடைய பிள்ளையின் பிறந்தநாள் வந்தால், உங்களுடைய பிள்ளைக்கு ஐந்து வயதாகும் வருடத்திலா அல்லது அடுத்த வருடத்திலா அவரை பாடசாலையில் சேர்ப்பது என்று உங்களுக்கு ஒரு விருப்பத்தெரிவு இருக்கிறது. சிறுவர்கள் வெவ்வேறு வேகங்களில், வெவ்வேறு வழிகளில் மற்றும் வெவ்வேறு நேரங்களில் கற்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில், உங்களுடைய பிள்ளை கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை பிந்தி ஆரம்பிப்பதால் நன்மையைப் பெறக் கூடும்.



## கனிஷ்ட பாலர்வகுப்பை ஆரம்பிக்கச் சிறந்த நேரம் என்ன என்பது பற்றிய ஆலோசனையை நான் எங்கு பெறலாம்?

உங்களுடைய பிள்ளைக்கு கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான சிறந்த நேரம் பற்றி உங்களுக்குச் சரியாகத் தெரியாவிட்டால், கனிஷ்ட பாலர்வகுப்பு பயிற்றுநரிடம் ஆலோசனை கேளுங்கள். உங்களுடைய பிள்ளைக்கு கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் எப்படி உதவலாம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

உங்களுடைய பிள்ளை அநேகமாகச் செல்லவுள்ள பாடசாலையிலுள்ள அதிபர் அல்லது ஆசிரியரைச் சந்தியுங்கள். பாலர் பாடசாலையைத் தொடங்க உங்கள் பிள்ளைக்கான சிறந்த நேரம் பற்றிக் கதையுங்கள். உங்களுடைய பிள்ளைக்கு பாலர் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் எப்படி உதவலாம் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

அதோடு, நீங்கள் உங்கள் பிள்ளையின் தாய் மற்றும் சேய் உடல்நலத் தாதி, குடும்ப வைத்தியர் மற்றும் உங்களுடைய பிள்ளை பார்க்கின்ற ஏனைய நிபுணர்கள் (உதாரணமாக, பேச்சு வைத்தியர், ஃபிசியோதெரபிஸ்ட்கள் அல்லது குழந்தை வைத்திய நிபுணர்) முதலியவர்களுடன் கதைக்கலாம்.

## என்னுடைய பிள்ளை ஒரு வருடத்திற்கும் கூடிய காலத்திற்கு கனிஷ்ட பாலர்வகுப்புக்குச் செல்ல முடியுமா?

சிறுவர்கள்,

- பூர்வீக மற்றும்/அல்லது ரோரெஸ் நீரிணைத் தீவினராகவும் அல்லது
- சிறுவர் பாதுகாப்புக்கு அறியப்பட்டவர்களாக அல்லது Child FIRST-க்கு சிறுவர் பாதுகாப்பால் குறிக்கப்பட்டால் அவர்கள் இலவச கனிஷ்ட பாலர்வகுப்பிற்குச் செல்லத் தகுதியுள்ளவர்கள்.

வழக்கமாக அவர்களுக்கு மூன்று வயதாகும் போது ஆரம்பிக்கின்ற பாலர் பாடசாலையை ஆரம்பிக்கும் முன்னர் இரண்டு வருடங்களுக்கு இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் கனிஷ்ட பாலர்வகுப்புக்குச் செல்லலாம்.

மூன்று வயதுள்ளவர்களுக்கான இலசவ கனிஷ்ட பாலர்வகுப்பைப் பற்றிய மேலதிக தகவலுக்கு **பக்கம் 4-க்குச் செல்க.**

நான்கு வயது கனிஷ்ட பாலர்வகுப்பைப் பூர்த்திசெய்யும் அபிவிருத்தித் தாமதங்களுள்ள சில சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லும் முன்னர், நிதியளிக்கப்படும் கனிஷ்ட பாலர்வகுப்பின் இரண்டாம் வருடத்தை முடிப்பதால் நன்மையடையக் கூடும்.

இந்தத் தெரிவுகள் பற்றி மேலதிகமாக அறிய விரும்பினால், கனிஷ்ட பாலர்வகுப்பு பயிற்றுநருடன் கதையுங்கள்.

## உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவையா?

நிதியளிக்கப்படும் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்துகொள்ளும் குடும்பங்களுக்காக விக்ரோரிய அரசாங்கம் ஒரு இலவச உரைபெயர்ப்பாளரை வழங்குகிறது? இலவச உரைபெயர்ப்பாளர் சேவையை அழைக்குமாறு உங்களுடைய பிள்ளையின் கனிஷ்ட பாலர்வகுப்பு பயிற்றுநரிடம் அல்லது சேவை முகாமையாளரிடம் கேளுங்கள்.

## தொடர்பான இணைப்புகள்

இலவசமாக அல்லது குறைந்த கட்டணத்தில் கனிஷ்ட பாலர்வகுப்பு –
**www.education.vic.gov.au/childhood/parents/kindergarten/Pages/fees.aspx**

மூன்று வயதான பிள்ளைகளுக்குரிய இலவச கனிஷ்ட பாலர்வகுப்பு –
**http://www.education.vic.gov.au/childhood/parents/kindergarten/Pages/earlystart.aspx**

அபிவிருத்தித் தாமதங்களுள்ள சிறுவர்களுக்கான கனிஷ்ட பாலர்வகுப்பின் இரண்டாம் வருடம் –
**http://www.education.vic.gov.au/childhood/parents/kindergarten/Pages/secondyear.aspx**

தயாரித்தவர்:
Department of Education and Training
2, ட்ரெசரி பிளேஸ், கிழக்கு மெல்போர்ன்
மெல்போர்ன் 3002
© விக்ரோரிய அரசு ஒகஸ்ற் 2015



VICTORIA State Government | Education and Training

# கனிஷ்ட பாலர்வகுப்புப் பற்றிய எல்லாம்

Tamil Translation



வழக்கமாக சிறுவர்களுக்கு நான்கு வயதாகும் போது, அவர்கள் பாடசாலையை ஆரம்பிப்பதற்கு முன்னருள்ள வருடத்தில் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செல்கிறார்கள். சில சேவைகள் மூன்று வயதான சிறுவர்களுக்கும் கூட கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அளிக்கின்றன.

உங்களுடைய பிள்ளை கனிஷ்ட பாலர்வகுப்புக்குச் செல்லத் தொடங்கும் சிறந்த நேரத்தைத் தேர்வுசெய்வது பற்றிய ஆலோசனைக்கு பக்கம் 6-க்குச் செல்க.

## கனிஷ்ட பாலர்வகுப்பு என்பது என்ன?

கனிஷ்ட பாலர்வகுப்பு (முன்பள்ளி என்றும் அழைக்கப்படும்) என்பது தகுதியுள்ள ஆரம்பகாலக் குழந்தைப் பருவத்தினருக்கான ஆசிரியரால் வழங்கப்படும் இளம் சிறுவர்களுக்கான ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

## எனது பிள்ளை ஏன் கனிஷ்ட பாலர்வகுப்புக்குச் செல்ல வேண்டும்?

கனிஷ்ட பாலர்வகுப்பு என்பது இளம் சிறுவர்களுக்குரிய முக்கிய படியாகும், இது எல்லாச் சிறுவர்களுக்கும் கண்டிப்பாகச் சிபாரிசு செய்யப்படுகிறது.

கனிஷ்ட பாலர்வகுப்பு ஆனது சிறுவர்களின் ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வை முன்னேற்றுகிறது, சிறந்த சமூகத் திறமைகளை உருவாக்க அவர்களுக்கு உதவுகிறது மற்றும் கற்றலிலுள்ள விருப்பத்தை ஊக்குவிக்கிறது என்று ஆராய்ச்சி காட்டுகிறது.

கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குச் செல்லும் சிறுவர்கள் அதிகம் சுதந்திரமாகச் செயற்படுபவர்களாகவும் தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள், அவர்கள் பாலர் பாடசாலைக்குச் செல்ல சீரான நிலைமாற்றத்தை அடைகிறார்கள்.

## கனிஷ்ட பாலர்வகுப்பில் என்ன நடக்கிறது?

உயர் தரமான கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் உங்களுடைய பிள்ளைக்கு பலதரப்பட்ட கற்றல் அனுபவங்களையும் செயற்பாடுகளையும் அளிக்கும், அவை தூண்டுதலாகவும் வேடிக்கையாகவும் இருக்கும். இயற்கையான உலகை ஆராய்தல், புதிய யோசனைகளைப் பட்டறிய விடுதல், பிரச்சனைகளைத் தீர்த்தல் போன்ற அனுபவங்கள் மற்றும் செயற்பாடுகள் ஊடாக உங்களுடைய பிள்ளையின் கற்றலும் ஆர்வமும் ஊக்குவிக்கப்படும்.

உங்களுடைய பிள்ளையால்:

- குழுச் செயற்பாடுகள் மற்றும் கூட்டு விளையாட்டு ஊடாக மற்றவர்களுடன் பணியாற்ற கற்க இயலும் மற்றும் சிநேகிதர்களை உருவாக்க இயலும்
- அவர்களுடைய ஆக்கத்திறனை வெளிப்படுத்த இயலும், உதாரணமாக நடனம், அசைவுகள் மற்றும் சித்திரம் ஊடாக
- பயிற்றுநர்கள் மற்றும் ஏனைய சிறுவர்களுடைய உரையாடல்களைக் கேட்டும், அவர்களுடன் உரையாடியும் தம்முடைய தகவல்தொடர்பை வளர்க்க இயலும்
- வாசித்தல், எழுதுதல் மற்றும் கணிதம் முதலியவற்றுக்கு அவர்களுக்குத் தேவைப்படும் திறமைகளை உருவாக்க இயலும்.





## கனிஷ்ட பாலர்வகுப்பை நான் எங்கே கண்டுபிடிக்கலாம்?

சில கனிஷ்ட பாலர்வகுப்புகள் தனித்து இயங்கும் சேவைகளாக இயங்குகின்றன (உதாரணமாக, சமூக கனிஷ்ட பாலர்வகுப்புகள்). மற்ற கனிஷ்ட பாலர்வகுப்புகள் முழு நாள் கவனிப்பு மையங்கள் அல்லது பாடசாலைகளின் ஊடாக இயக்கப்படுகின்றன.

நீங்கள் இருக்கும் பகுதியில் (அல்லது விரும்பிய பகுதியில்) கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்டுபிடிக்க, **www.education.vic.gov.au/findaservice/Home.aspx** என்ற இணையத்தளத்தைப் பாருங்கள் அல்லது உங்களுடைய உள்ளூர் சபையைத் தொடர்புகொள்ளுங்கள், இதை **www.dtpli.vic.gov.au** என்ற இணையத்தளத்திற்குச் சென்று கண்டுபிடிக்கலாம்

உங்களுடைய குடும்பத்திற்குப் பொருத்தமான கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தைப் பற்றிய ஆலோசனையைப் பெற பக்கம் 4-க்குச் செல்க.

## சகல சிறுவர்களும் கனிஷ்ட பாலர்வகுப்பில் கலந்துகொள்ளலாம்

கனிஷ்ட பாலர்வகுப்பு சகல சிறுவர்களுக்கும். உங்களுடைய பிள்ளைக்கு ஊனம் அல்லது கற்றல் சிரமம் இருந்தால், நிகழ்ச்சித் திட்டமும் சுற்றாடலும் உங்களுடைய பிள்ளைக்கு எவ்வாறு ஆதரவளிக்கலாம் என்பது பற்றி பயிற்றுநர்கள் உங்களுடன் கதைப்பார்கள்.

கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் உங்களுடைய பிள்ளையைச் சேர்ப்பதில் அல்லது உங்களுடைய குடும்பத்திற்குப் பொருத்தமான ஒரு நிகழ்ச்சித் திட்டத்தைக் கண்டுபிடிப்பதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்களுடைய உள்ளூர் சபையைத் தொடர்புகொள்ளுங்கள்.

## கனிஷ்ட பாலர்வகுப்புக்கு எவ்வளவு செலவாகும்?

நிதியளிக்கப்படும் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை இயக்கும் செலவுக்குப் பங்களிப்பதற்காக விக்ரோரிய அரசாங்கம் நிதியை அளிக்கிறது, இது நான்கு வயது கனிஷ்ய பாலர்வகுப்புக்கான கட்டணங்களை முடிந்தவரை குறைவாக வைத்திருக்க உதவுகிறது.

இந்தச் சான்றிதழைப் பாருங்கள், இது கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் விக்ரோரிய அரசாங்கத்திடமிருந்து நிதியைப் பெறுகிறது என்பதையும் அது தகுதியுள்ள ஆரம்பகாலக் குழந்தைப்பருவ ஆசிரியரால் வழங்கப்படுகிறது என்றும் காட்டுகிறது.




கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்ற சேவைகள், அந்த நிகழ்ச்சித் திட்டங்களை இயக்கும் செலவைப் பூர்த்திசெய்ய உதவுவதற்கு பெரும்பாலும் கட்டணங்களை வசூலிக்கின்றன. கட்டணங்கள் தனிப்பட்ட சேவைகளால் அமைக்கப்படுகின்றன மற்றும் உங்களுடைய பிள்ளை கலந்துகொள்ளும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை, குழுவின் அளவு, சுற்றுலாக்கள் போன்ற மேலதிகச் செலவுகள் முதலியவற்றின் அடிப்படையில் மாறுபடலாம்.

## ஒரு கிழமையில் எத்தனை மணித்தியாலங்களுக்கு என்னுடைய பிள்ளை கனிஷ்ட பாலர்வகுப்புக்குச் செல்லலாம்?

பெரும்பாலான நான்கு வயதான கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் கிழமைக்கு 15 மணித்தியாலங்கள் அளிக்கப்படுகின்றன.

## பாடசாலைக்கு முன்புள்ள வருடத்திலுள்ள சிறுவர்களுக்கான இலவச அல்லது குறைந்த செலவு கனிஷ்ட பாலர்வகுப்பு

விக்ரோரிய அரசாங்கம் சில சிறுவர்களுக்கு கட்டணங்களைக் குறைக்கிறது, ஆகவே அவர்கள் வழக்கமாக நான்கு வயதாக இருக்கும் போது பாலர் பாடசாலையைத் தொடங்கும் முன்னர் இலவசமாக அல்லது குறைந்த செலவில் கனிஷ்ட பாலர்வகுப்பிற்குச் செல்லலாம்.







உங்களுடைய பிள்ளை பின்வருமாறு இருந்தால், தகுதிபெறுகிறது:

- பூர்வீக மற்றும்/அல்லது ரோரெஸ் நீரிணைத் தீவினராக இருந்தால்
- மூன்று பிள்ளை அல்லது நான்கு பிள்ளையாகப் பிறந்தவர் என்றால்
- பிள்ளையிடம் (பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம்) தகுதியுள்ள தள்ளுபடி அட்டை அல்லது அகதி, மனிதாபிமான அல்லது புகலிடம் தேடுபவர் விசா இருந்தால்.

உங்களுடைய பிள்ளை கட்டண மானியத்திற்குத் தகுதியுள்ளவராக இருக்கலாம் என்று நீங்கள் நினைத்தால், உங்களுடைய பிள்ளையின் கனிஷ்ட பாலர்வகுப்புப் பயிற்றுநர் அல்லது சேவை முகாமையாளரிடம் கேளுங்கள்.

## மூன்று வயதான பிள்ளைகளுக்குரிய இலவச கனிஷ்ட பாலர்வகுப்பு

விக்ரோரிய அரசாங்கம் சில சிறுவர்களுக்கு கட்டணங்களைக் குறைக்கிறது, ஆகவே அவர்கள் வழக்கமாக மூன்று வயதாக இருக்கும் போது பாலர் பாடசாலையைத் தொடங்கும் முன்னர் இலவசமாக இரண்டு வருடங்களுக்கு கனிஷ்ட பாலர்வகுப்பிற்குச் செல்லலாம்.

உங்களுடைய பிள்ளைக்கு ஏப்ரல் 30 திகதிக்கு முன்பு குறைந்தது மூன்று வயதாகவும்:

- பூர்வீக மற்றும்/அல்லது ரோரெஸ் நீரிணைத் தீவினராகவும் அல்லது
- சிறுவர் பாதுகாப்புக்கு அறியப்பட்டவராக அல்லது Child FIRST-க்கு சிறுவர் பாதுகாப்பால் குறிக்கப்பட்டால் அவர் இலவச கனிஷ்ட பாலர்வகுப்பிற்குச் செல்லத் தகுதியுள்ளவர்.

உங்களுடைய பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் முன்னர் ஒரு இலவச நிகழ்ச்சித் திட்ட இரண்டு வருடங்களைப் பெற்றிருந்தால், அவர் அடுத்த வருடம் இலவசமாக அல்லது குறைந்த செலவில் நான்கு வயதானவருக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்துகொள்ளலாம்.

மூன்று வயதுள்ளவர்களுக்கான இலவச கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய மேலதிகத் தகவல்களுக்காக உங்களுடைய பிள்ளையின் கனிஷ்ட பாலர்வகுப்புப் பயிற்றுநரிடம் அல்லது சேவை முகாமையாளரிடம் கேளுங்கள்.

## கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தைத் தேர்வுசெய்தல்

ஒவ்வொரு குடும்பமும் வித்தியாசமானது. நீங்கள் தேர்வுசெய்யும் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் உங்களுடைய பிள்ளையுடனும் குடும்பத்துடனும் நன்கு பொருந்த வேண்டும்.

கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டத்தை சீக்கிரமாகவே தேடத் தொடங்குவது நல்ல யோசனையாகும், ஏனெனில் விக்ரோரியா எங்கும் சேர்க்கைச் செயலாக்கங்கள் வேறுபடுகின்றன. பிள்ளைகளுக்கு இரண்டு வயதாகும் போதே சில சேவைகள் விண்ணப்பங்களை ஏற்கின்றன.

கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் சுருக்கமான பட்டியலை நீங்கள் பெற்றதும், அவர்கள் பெற்றோர்களுடன் கலந்துரையாடும் நாட்களை அல்லது தகவல் அமர்வுகளை வைக்கிறார்களா என்பதை அறிய அல்லது சந்திப்பிற்கான முன்பதிவை மேற்கொள்ள சேவைகளைத் தொடர்புகொள்ளுங்கள்.

இது ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கும் ஒரு ‘உணர்வைப்’ பெற, கேள்விகளைக் கேட்க மற்றும் உங்களுடைய பிள்ளையைப் பற்றிய தகவலைப் பகிர சிறந்ததொரு வழியாகும். நீங்கள் கனிஷ்ட பாலர்வகுப்பு நிகழ்ச்சித் திட்டம் இயங்குகின்ற நாட்கள் மற்றும் நேரங்கள், உங்களுடைய பிள்ளையை எப்படிப் பதிவுசெய்வது, அறவிடப்படும் ஏதேனும் கட்டணங்கள் மற்றும் கிடைக்கின்ற மானியங்கள் முதலியவற்றைப் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

உங்களால் முடிந்தால், ஒன்றுக்கும் மேற்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைச் சென்றுபாருங்கள். மற்றக் குடும்பங்கள் கூறுவதில் மட்டுமே சார்ந்திருக்க வேண்டாம்.